<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 20/2018

Deposition of Witness : PW 2

Name : பிரித்திவிராஜ் (வயது – 68)

Father's Name /W/o : த/பெ சந்திரகேசன்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : அம்மனூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 23.09.2025.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் காட்டப்படும் பிரமாண பத்திரம் யார் சொல்லி தயார் செய்தது என்றால் வழக்கறிஞர் சொல்லி தயார் செய்தது. அதிலுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் அங்கம்மாள். அங்கம்மாள் யார் பெயிடிரல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நாகராஜ். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சந்திற்காக தாக்கல் செய்துள்ளார் . நான் இருக்கும் அம்மனூர் கிராமத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வளிவு தூரம இருக்கும் என்றால் 1/2 கி.மீ தூரம் இருககும் .

2. மேற்படி சந்து எவ்வளவு அளவு என்றால் 6 அடி அகலம், 70 அடி நீளம். நான் மேற்படி இடத்தை அளத்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி அளவு அங்கம்மாள் சொல்லி தன் எனக்கு எப்படி தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தின் சடர்வே் என்னவென்றால் 327/1 பி. மேற்படி சர்வே எண்ணிற்கு ஆவணம் நான் பார்த்தேனா என்றால் பார்த்தோன்.

3. எனக்கு தெலுங்கு தெரியும் என்றால் தெரியாது. பழைய பத்திரம் தெலுங்குவில் எழுதி உள்ளது என்றாலும் அதை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். பழைய பத்திரம் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றா நாகராஜ் அவர்களின் பாட்டியிடம் இருந்து வாங்கினார். நான் மேற்படி பத்திரத்தில் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான்.

4. மேற்படி சந்துவிற்கு செக்பந்தி என்னவென்றால் வடக்கு பக்கம் பாபு தெற்கு பக்கம் அங்கம்மாள் வீடு, கிழக்கு பக்கம் ரோடு மேற்கு பக்கம் நாகராஜ் வீடு . கெங்குபெட்லு சுப்பம்மாளை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு சிறு வயதில் இருந்த தெரியும். சுப்பம்மாள் 70 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார் என்று என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் எனக்கு தற்போது என்ன வயது என்றால் 68 வயது ஆகிறது என்றால் சரிதான்.

5. சுப்பம்மாள் 70 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார் என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி 70 ஆண்டுகளாக சுப்பம்மாள் வாழ்ந்து வந்தார் என்று அவர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து சந்தில் முதல் முதலில் கூரை வீடு இருந்ததா என்றால் இருந்தது. பிறகு எப்போது வீடு கட்டினார் என்றால் 14 வருடத்திற்கு பிறகு வீடு கட்டினார். மேற்படி ஓட்டு வீட்டில் தான் அங்கம்மாள் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான்.

6. என் பிரமாண வாக்குமூலத்தில் 1965 ஆண்டிலிருந்தே என் தாயார் அனுபவித்து வந்தார் என்று தெரிவித்துள்ளேன் என்றாலும் என் தாய் அனுபவித்து வந்தாரா என்றால் அது சுப்பம்மாளின் தாய் என்று குறிப்பிட்டுள்ளேன். என் வாக்குமூலத்தில் மேற்படி விபரத்தை யார் சொல்லி தயார் செய்தது என்றால் சுப்பம்மாள் சொன்னார். மேற்படி சந்துவிற்கு அரசாங்கம் பட்டா வழங்கியுள்ளார் என்றால் இல்லை. தாவா இடமும் அதை சுற்றி இருக்கும் இடம் ரயில்வே புறம்போக்கு என்றால் சரிதான்.

7. நாகராஜ் 30 வருடமாக தொல்லை கொடுத்துள்ளதாக என் பிரமாண வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் என்ன தொல்லை செய்தார் என்றால் சந்திற்காக தொல்லை செய்தார். நான் 30 வருடமாக அங்கம்மாளின் வீட்டிற்கு சென்று வருவேனா என்றால் ஜபத்திற்கு சென்று வருவேன். ஜபத்திற்கு எப்போது செல்வேன் என்றால் ஜபத்தில் இருந்து அறிவிப்பு வந்தால் செல்வேன். தினந்தோறும் அங்கம்மாளின் வீட்டிற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். அங்ககம்மாள் எனக்கு வேண்டிப்பட்டவர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அங்கம்மாள் காவல் நிலையத்தில் புகார் அளித்த விபரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்.